# இரயில்வே துறை - பள்ளிகள் - முதல்நிலைத் (GRADE - 1)
# தமிழாசிரியர் பதவிக்கான தேர்வு - தமிழ் வினாத்தாள்

நாள்: 26.07.2012 மொத்த மதிப்பெண்கள்: 100
காலம்: 3 மணி நேரம்: 10.00 மணி

## பகுதி - அ

### I. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க (50 x 1 = 50)

1. நண்ணுமிளமைப் பருவத்திலே முதல்... எனத் தொடங்கும் மொழி வாழ்த்துப் பாடலின் பாவகை
   அ. எண்சீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்
   ஆ. அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்
   இ. சிந்து வகை

2. அடிவாழ்த்துவம் – சொல்லின் இலக்கணக் குறிப்பு.
   அ. தன்மைப் பன்மை வினைமுற்று
   ஆ. வினைத்தொகை
   இ. இரண்டாம் வேற்றுமைத் தொகை

3. பெருந்திணை என்பது
   அ. பொருந்தாத காதலாகும் ஆ. ஒருதலைக்காதல் இ. இருவரிடத்தும் தோன்றும் காதல்

4. புறநானூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள துறைகள்
   அ. 11 ஆ. 75 இ. 65

5. 'யாமம்' என்பது எந்தப் பொழுதினைக் குறிப்பது?
   அ. நண்பகல் ஆ. நள்ளிரவு இ. விடியற்காலை

6. 'புலன்' என்னும் இலக்கிய வகை
   அ. கலம்பகம் ஆ. பள்ளு இ. உலா

7. முக்கூடற்பள்ளுக்குரிய பா வகை
   அ. சிந்துப்பா ஆ. ஆசிரியப்பா இ. வஞ்சிப்பா

8. 'சாதகம்' என்பது
   அ. சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று ஆ. இலக்கண நூல் இ. நாடக நூல்

9. "பொருளென்னும் பொய்யா விளக்கம் இருளறுக்கும்
   எண்ணிய தேயத்துச் சென்று" – இக்குறளில் பயின்றுள்ள அணி
   அ. இல்பொருள் உவமை அணி
   ஆ. உவமை அணி
   இ. ஏகதேச உருவக அணி

10. கம்பர் தம் நூலுக்கு இட்ட பெயர்
    அ. கம்பராமாயணம் ஆ. இராமஅவதாரம் இ. இராமாயணம்

11. தமிழரசி குறவஞ்சியின் பாட்டுடைத் தலைவன்
    அ. முருகன் ஆ. சிவன் இ. திருமால்

12. கயன் முள்' இலக்கணக் குறிப்பு
    அ. ஆறாம் வேற்றுமைத் தொகை ஆ. வினைத்தொகை இ. வினைமுற்று

13. 'நல்லது செய்தல் ஆற்றீராயினும் அல்லது செய்தல் ஓம்புமின்" - இடம்பெற்ற நூல்

அ. அகநானூறு ஆ. புறநானூறு இ. குறுந்தொகை

14. உவமையைச் சொன்ன அளவில் உவமிக்கப்படும் பொருள் புலப்படுவது

அ. உள்ளுறை உவமை அ. இறைச்சி இ. கற்பனை

15. தமிழரின் வாழ்வியல் சிந்தனைகளைக் கருவூலமாகக் கொண்டு விளங்கும் நூல்

அ. அகநானூறு ஆ. ஐங்குறுநூறு இ. புறநானூறு

16. அகநானூறு எத்தனைப் பகுதிகளாக உள்ளது.

அ. இரண்டு ஆ. மூன்று இ. நான்கு

17. அகநானூற்றுக்கு வழங்கும் வேறு பெயர் ............................

அ. அகப்பாட்டு ஆ. நெடுந்தொகை இ. அகத்திணை

18. திணை என்னும் சொல்லின் பொருளைக் குறிப்பிடுக.

அ. ஒழுக்கம் ஆ. அன்பு இ. காதல்

19. முற்றிய தேங்காயைக் குறிக்கும் சொல்

அ. நெற்று ஆ. தென்னை இ. இளந்தேங்காய்

20. கபிலர் எந்தத்திணைப் பாடல்கள் பாடுவதில் வல்லவர்

அ. முல்லை ஆ. மருதம் இ. குறிஞ்சி

21. சிலப்பதிகார உரையாசிரியர்களுள் ஒருவர்

அ. இளம்பூரணர் ஆ. பரிமேலழகர் இ. அரும்பதவுரைக்காரர்

22. வரி என்பது எந்த வகையைச் சார்ந்தது?

அ. சந்தப்பாடல் ஆ. இசைப்பாடல் இ. கலிப்பாடல்

23. "உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்; உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவதியல்பே" என்னும் விதிகள் பொருந்திவரக் கூடிய சொல்

அ. தடந்தோள் ஆ. இரும்பொறை இ. மணிக்கரசு

24. கம்ப நாடகத்தின் யாப்பு வண்ணங்களுக்குக் கூறப்படும் கணக்கீடு

அ. தொண்ணூற்றாறு ஆ. நூற்றியெட்டு இ. நூறு

25. 'தனயை' என்ற சொல்லின் பொருள்

அ. உடன்பிறந்தாள் ஆ. அம்மா இ. மகள்

26. 'கித்தேரியம்மாள் அம்மானை' - எனும் நூலினைப் படைத்தவர்

அ. ஏச்சகிருஷ்ணபிள்ளை ஆ. ஜி.யூ.போப் இ. வீரமாமுனிவர்

27. "எனை ஈன்ற தந்தைக்கும் தாய்க்கும் மக்கள்
இனம் ஈன்ற தமிழ்நாடு தனக்கும்" -என்ற வரிகளைப் பாடியவர்

அ. பாரதியார் ஆ. முடியரசன் இ. பாரதிதாசன்

28. 'உலா' இலக்கியத்தை எந்தப் பாவகையால் இயற்றப்படுவர்?

அ. கலிவெண்பா ஆ. புலன் இ. விருத்தம்

29. திருவேங்கடத்தந்தாதி என்னும் நூலினைப் பாடியவர்

அ. மணவழகர் ஆ. குமரகுருபரர் இ. பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்

30. பதினெட்டு உறுப்புளால் பாடப்படும் சிற்றிலக்கியம்

அ. உலா ஆ. கலம்பகம் இ. தூது

31. சாகித்திய அகாதெமி பரிசு பெற்ற பாரதிதாசனின் நூல் எது?

அ. பாண்டியன் பரிசு, ஆ. இருண்ட வீடு இ. பிசிராந்தையார்

32. 'நூல்' என்னும் பொருள் தரும் சொல்

அ. பனுவல் ஆ. செய்யுள் இ. உரை

33. தமிழகத்தின் 'வேர்ட்ஸ்வர்த்' எனப் பாராட்டப்பெறும் கவிஞர் பெயரைக் குறிப்பிடு.

அ. முடியசரன் ஆ. கம்பதாசன் இ. வாணிதாசன்

34. பாராங்கல் மீதில் விழும் மழைநீர் போலப்
பளிச்சென்று துன்பமெலாம் சிதறிப்போகும்" - பாடியவர்

அ. வாணிதாசன் ஆ. சுரதா இ. பாரதிதாசன்

~~35. 'சிதம்பரம்' என்னும் சொல்லின் தமிழ்ப்பெயர்.~~

~~அ. திருவானைக்கா~~ ~~ஆ. திருவரங்கம்~~ ~~இ. திருச்சிற்றம்பலம்~~

36. பால்கனி (Balcony) எனும் ஆங்கிலச் சொல்லுக்குரிய தமிழாக்கம் என்பது,

அ. முற்றம் ஆ. மாடிவீடு இ. முகப்பு மாடம்

37. லம்ப்சம் (Lumpsum) என்பதன் தமிழாக்கம்

அ. பெரியதொகை ஆ. திரட்சித்தொகை இ. கூட்டம்

38. "வெறுங்கை என்பது மூடத்தனம் - உன் விரல்கள் பத்தும் மூலதனம்" - எனும் கவிதை வரிகளைப் படைத்தவர்

அ. பாரதி ஆ. திரு.வி.க. இ. தாராபாரதி

39. சுந்தரர் தேவாரம் எந்தத் திருமுறையில் வைக்கப்பட்டுள்ளது?

அ. நான்காவது திருமுறை ஆ. ஒன்பதாவது திருமுறை இ. ஏழாவது திருமுறை

40. "சின்ன சீறா" என்ற நூலை எழுதியவர்

அ. உமறுப்புலவர் ஆ. குணங்குடி மஸ்தான் இ. பனு அகமது மரைக்காயர்

## இந்தி

41. 1963ல் உருவாக்கப்பட்ட அலுவல் மொழிகளுக்கான அரசியல் சட்டத் திருத்தம் எப்பொழுது கொண்டுவரப்பட்டது?

அ. 1967 ஆ. 1965 இ. 1949

42. ஒவ்வொரு ஆண்டும் இந்தி தின நாள் எப்பொழுது கொண்டாடப்படுகிறது?

அ. ஆகஸ்டு 18 ஆ. செப்டம்பர் 14 இ. ஜனவரி 17

43. அருணாச்சலபிரதேச மாநிலத்தின் அலுவல் மொழி எது?

அ. ஆங்கிலம் ஆ. இந்தி இ. உருது

44. எந்தெந்த மாநிலங்களில் 'உருது' அலுவல் மொழியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

அ. ஆந்திரம் & கர்நாடகம் ஆ. ஆந்திரம் & பீகார் இ. ஆந்திரம் & குஜராத்

45. எந்த சட்டவிதி பகுதி VIன் கீழ் வருகிறது.

அ. சட்டவிதி 120 ஆ. சட்டவிதி 210 இ. சட்டவிதி 320

46. 1973இல் கொண்டு வரப்பட்ட 'ரயில்வே இந்தி சலாகா் குழுவின்' முதல் தலைவா் யாா்?

அ. G.B. பந்த் ஆ. B.G. கீா் இ. ஸ்ரீ லலித் நாராயன் மிஸ்ரா

47. எந்த ஆண்டில் இந்தி மொழியில் ரயில்வே வரவு செலவு அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. அப்போதைய ரயில்வே அமைச்சா் யாா்?

அ. 1958 ஜபாா் ஷெரீப் ஆ. 1956 லால்பகதூா் சாஸ்திரி இ. 1959 P.V. நரசிம்மராவ்

48. அரசியலமைப்புச் சட்டம் பகுதி 17-இல் எத்தனைச் சட்ட விதிகள் உள்ளன.

அ. 8 ஆ. 10 இ. 9

49. மத்திய இந்திக் குழுவின் தலைவா் யாா்?

அ. மக்களவைத் தலைவா் ஆ. ஜனாதிபதி இ. பிரதமா்

50. மத்திய அரசு எழுத்தா் பணிப் பதவிக்கான இறுதி இந்திப் பயிற்சி வகுப்பு எது?

அ. பிரவன் ஆ. பிரக்யா இ. மத்திமா

## பகுதி - ஆ

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு**
**இருபக்கங்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்** **(5 x 10 = 50)**

1. ஐந்திணைகளின் முதல், கரு, உரிப் பொருள்களைப் பற்றி விவரிக்க.
2. 'அறிவுடைமை' என்னும் அதிகாரத்தில் கூறப்பட்டுள்ள திருவள்ளுவரின் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.
3. கண்ணகியின் சூளுரையைக் கேட்ட நகா்மாந்தா்களின் திகைப்பும், கண்ணகி ஏங்கி உரைத்தனவும் பற்றி விளக்குக.
4. சீதையை அனுமன் கண்டுவந்து கூறிய செய்திகளைத் தொகுத்து எழுதுக.
5. கோலியாத்து என்ற அரக்கனின் வருகையும், தாவீது அவனைக் கொன்ற திறத்தினையும் பற்றி விவரிக்க.
6. 'தமிழ் – உயா் தனிச்செம்மொழி' என்பதைப் பரிதிமாற் கலைஞரின் கருத்துகொண்டு ஆராய்க.
7. நீதிநூல்களில் காணும் இலக்கிய நயத்தை அ. சிதம்பரநாதன் எவ்வாறு எடுத்தியம்புகிறாா்? விளக்குக.
8. ஜெயகாந்தனின் 'சட்டை' சிறுகதையின் கருப்பொருளும் சுவையும் குன்றாமல் சுருக்கி வரைக.